# <u>Principal District Munsif Court, Sankarankovil.</u>

தேதி : 03.01.2025

**<u>EA.No.2/</u>**2023 in EP/No.11/2020 in RCOP.NO.4/2007

ம.சா.2. ரத்தினம்

**<u>ம.சா.2. மீண்டும் ஆஜர் சத்தியபிரமாண வாக்குமூலத்தின்பேரில் 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>**

எனக்கு சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்திலிந்து சம்மன் எதுவும் வரவில்லை. மனுதாரர் பாலமுருகனும் அவரது தந்தையும் எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எனக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியாது. தமிழ் பேசுவேன். எனக்கு மலையாளம் தாய்மொழி. எனக்கு மலையாளம் மற்றும் ஆங்கிலம் எழுதப் படிக்கத் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. எனக்கு சங்கரன்கோவில் திரு.வி.க. தெருவில் வீடு உள்ளது. அந்த வீட்டில் எனக்கு குடும்ப அட்டையும் ஆதார் அடையாள அட்டையும் உள்ளது. என்னுடைய வீடு சம்பந்தமாக வேறு ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள முதன்மை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் பற்றி எனக்குத் தெரியாது.

**<u>மறு விசாரணை</u> : இல்லை.**

(Sd.) xxxxxxx

Principal District Munsif,

Sankarankovil.